FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, யூன் - 2019**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education Northern Province**
**Term Examination, June - 2019**

| தரம் :- 13 (2019) | இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 11) 5 | 21) 2 | 31) 1 | 41) 2 |
| 2) 3 | 12) 1 | 22) 1 | 32) 3 | 42) 5 |
| 3) 2 | 13) 3 | 23) 5 | 33) 1 | 43) 3 |
| 4) 5 | 14) 2 | 24) 4 | 34) 5 | 44) 1 |
| 5) 4 | 15) 4 | 25) 3 | 35) 4 | 45) 4 |
| 6) 2 | 16) 5 | 26) 4 | 36) 2 | 46) 2 |
| 7) 3 | 17) 2 | 27) 3 | 37) 2 | 47) 5 |
| 8) 1 | 18) 4 | 28) 1 | 38) 3 | 48) 3 |
| 9) 5 | 19) 1 | 29) 2 | 39) 4 | 49) 1 |
| 10) 4 | 20) 3 | 30) 5 | 40) 1 | 50) 4 |

(50x2=100 புள்ளிகள்)

01) **அ) வழிபாட்டு முறைகள்.**

இயற்கை வழிபாடு, பலதெய்வ வழிபாடு, ஒரு தெய்வ வழிபாடு (ஏகம் சத்), யக்ஞம், யாகம், உபாசனை முறைகள் வேண்டல், அக்கினி வழிபாடு, எரியோம்பல், மந்திரங்களை உச்சரித்தல், அவிப்பொருள் வழங்குதல், பண்டமாற்று முறை வழிபாடு, இசை வழிபாடு, ஒரு தெய்வத்திற்குரிய பல பெயர் சொல்லி வழிபடுதல். (சதருத்திரியம்).

- இல்லற வாழ்வு தொடர்பான சடங்குகள் சமஸ்காரங்கள், உபநயனம், அன்னப் பிரசானம், திருமணக்கிரியைகள்.

(5 புள்ளிகள்)

**ஆ) தத்துவ சிந்தனைகள்**

- வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் பல்வேறு அம்சங்கள் பற்றியும், இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளையும் விபரிக்கின்றன.
- பரம் பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், ஜம சூக்தம், வருண சூக்தம் போன்ற பகுதிகள் உண்டு.
- ரிக்வேத 1 : 64 : 46 வது பாடலில், 'ஏகம் சத் விப்ரா வகுதா வகுந்தி' என்னும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாக உள்ளது.
- இருக்கு வேதத்திலுள்ள நாஸதீயப் பாடலில் இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.
- வேத இலக்கியங்களில் பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பான சிந்தனைகளையும் காணலாம்.
- இருக்கு வேதத்தில் உள்ள யம சூக்தம், இறப்பு பற்றிய பாடல்கள் போன்ற பகுதிகளில் ஆன்மாவின் இறப்புக்கு பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள், வினைகளுக்காக பயன்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
- பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்ச படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்களை இருக்கு வேதத்திலுள்ள வருணன் பற்றிய பாடல்களில் வரும் வருண சூக்தம் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது.

- ரிதத்திற்குரிய பொறுப்புடையவன் வருணன். அதனால் ரிதஸ்ய கோபா, ரிதஸ்வான் என்ற பெயர்கள் அவனுக்கு உண்டு. வருணன் உலக ஒழுங்கைப் பேணுவனாகவும், மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் கூறப்படுகின்றான். மேற் கூறியவற்றின் அடிப்படையில் வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருப்பதுடன் அவை பிற்கால மெய்யியல் வளர்ச்சிக்கும் முன்னோடி என்பர்
- வேதங்களின் இறுதிப்பகுதியாக அமைந்த உபநிடதத்தில் பிரமம், ஆன்மா பற்றிய சிந்தனைகள், முத்தி பற்றிய கருத்துக்கள் விரிவாக ஆராயப்படவுள்ளன.

(5 புள்ளிகள்)

**இ) தர்மங்கள்**

- “வேதங்களே அனைத்து தர்மங்களுக்கும் மூலம்” (வேதோ அகில தர்ம மூலம்) வேதங்களில் சனாதன தர்மம், வைதிக தர்மம் என்பவற்றின் அடிப்படைகளைக் காணமுடியும். நற்சிந்தனைகளும் நற்செயல்களும் வேத இலக்கியங்களில் சுட்டிக் காட்டப்படுகின்றன. நல்வாழ்வுக்கு ஏற்ற தர்மங்களுக்கு அடிப்படைகளாக அமைகின்றன.
- யமசூக்தத்தில் நன்மையான வாழ்வின் அடிப்படைகள் கூறப்பட்டுள்ளன.
- இல்லறதர்மம், ஆச்சிரம தர்மம், புருஷ தர்மம், ஸ்திரீ தர்மம், இராஜ தர்மம் ஆகியன பிரதானமானவை. குரு வழிபாடு, குருவுக்கு கீழ்படிதல், குருசேவை ஆகியனவும் நற்தருமங்களாகும். வருணனுடைய ரிதம், தர்மம் தலைகாக்கும் என்னும், கோட்பாட்டை வலியுறுத்துகின்றது.
- இவற்றின் மூலம் சமூக ஒருமைப்பாடு, வன்முறை இன்மை, அன்பு பாராட்டுதல், பெரியோர் காட்டிய வழியில் நடத்தல், கடவுள் வழிபாடு, ஆண் பெண் சமத்துவம் சமூக கட்டமைப்பு, ஆத்மீக விடுதலை, ஆத்மீக வாழ்வு என்பன ஏற்படும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது.

(5 புள்ளிகள்)

**ஈ) முக்கியத்துவம்**

- இந்து சமய வளர்ச்சியில் வேதங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.
- இந்து சமயம் சார்ந்த இறை நம்பிக்கை, தத்துவ சிந்தனைகள், அரசியல், சமூக சிந்தனைகள் போன்றனவற்றின் வளர்ச்சியில் வேதங்கள் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளன.
- வேதங்கள் இறை சம்மந்தமுடையது என்பதுடன், அக்கால மக்களின் சமய நம்பிக்கை பற்றி அறிய உதவும் முக்கிய இலக்கிய மூலமாகவும் அமைகின்றன.
- பிற்காலத்தில் வைதீக மரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு வேதங்கள் பிரமாணமாய் அமைந்தன.
- நால்வகை ஆச்சிரம நிலைகளின் வளர்ச்சிக்கும் வேதங்களே அடிப்படையாகும்.
- தரும சாத்திரங்கள், தரும சூத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றின் உருவாக்கத்தில் வேதங்களுக்கு முக்கிய பங்குண்டு.
- இறைவனைத் துதித்துப் பாடிய முதல் துதிப்பாடல்களாக வேதப் பாடல்கள் உள்ளன. பிற்காலத்தில் எழுந்த துதிப் பாடல்களுக்கு வேதங்களே முன்னோடி.

  உ+ம் :- நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாசுரங்கள்

  “வேத நெறி தழைத்தோங்க..........” என்னும் பாடல்கள் வேத மரபின் வளர்ச்சியை எடுத்து உரைக்கும்.

  ஆழ்வார் பாடல்களில் “அமரவோரங்க மாதும் வேதமோர் நான்கு மோதி.” என தொடரடிப் பொடியாழ்வார் பாடுகிறார்.

*02)* **மகாபாரத அறிமுகம்**

மகாபாரதத்தினை ஐந்தாம் வேதம் எனக்கூறுவதும் மரபாகும். மகாபாரதம் விரிவுபட்டதொரு இலக்கியக் களஞ்சியமாக விளங்குகிறது. அத்தோடு இந்துக்களின் வாழ்க்கை நெறிகளையும் இலட்சியங்களையும் வெளிப்படுத்தும் வடமொழிக் காப்பியமாகவும் விளங்குகின்றது.

**அ) இலக்கிய மரபு**

- மகாபாரதம் வீரக் காவியம் என்னும் வகையில் 1 லட்சத்து 26 ஆயிரம் சுலோகங்களையுடையது.

agaram.lk

- பலவகையான இலக்கிய மரபுகள் சிந்தனைகள் பண்பாட்டம்சங்கள் சங்கமமாயிருக்கும் ஒரு காவியம்.
- வீரகாவியம் என்னும் வகையில் குருவம்ச கதைகளை வெளிப்படுத்துவதால் உலகளாவிய நிலையில் இணையற்றது.
- குப்தர் காலத்தில் முழுவடிவம் பெற்றது. அதன் முன் பகுதிகள் பழமையானவை.
- வேத மரபினையும் பிற்கால பண்பாடுகளையும் இணைக்கும் இலக்கியமாகப் புகழ் பெற்றது.
- இந்திய இலக்கிய வரலாற்றில் காவியம், நாடகம், நாட்டிய நாடகம், நாட்டார் வழக்குக் கதைகள், சிறுகதைகள் எனப் பல இலக்கியங்களுக்கு மூலமானது. மகாபாரத கதாபாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டதன் கிழக்காசிய நாடுகளினும் பாரதயுத்தம் அர்ச்சுனவிவாகம் என்னும் இலக்கியங்களும் எழுச்சி பெற்றுள்ளன. இந்து தத்துவ கோட்பாட்டுடன் புருஷார்த்தங்களையும் விளக்குகின்றது.
- பல இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.
- வேறு வேறு வடிவங்களிலும் எழுந்துள்ளது.

(5 புள்ளிகள்)

**ஆ) சமுதாய வழமைகள்**

இந்துக்களின் சமுதாய அமைப்பில் ஆச்சிரம தர்மம் பிரதானமானது. பிரமச்சரிய, கிருகஸ்த நிலைகள் சிறப்பாக விளக்கப்பட்டுள்து. இவை அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும். புருடார்த்த நிலைகளுடன் தொடர்பானவை. அதேவேளை நீதி, நேர்மை, சத்தியம், பொறுமை, வீரம், கற்பு, செய்நன்றி மறவாத் தன்மை, கொடையின் சிறப்பு, குருபக்தி, பற்றற்ற செயல், பிரபக்தி மார்க்கத்தின் சிறப்பு தர்மத்தின் உயர்வு, இல்லற தர்மம், குடும்பம், சகோதரபாசம், குருகுலுக்கல்வி, முதியோரை மதித்தல் போன்ற விடயங்கள் பேசப்படுகின்றது.

- திரௌபதை – கற்பு
  கர்ணன் – கொடை
  ஏகலைவன் – குருபக்தி
  போன்ற விடயங்களை உதாரம் காட்டி விளக்குதல்.

(5 புள்ளிகள்)

**இ) சமய நெறிகள்**

agaram.lk

- மகாபாரதத்தின் இறுதியில் வைணவச் சமயச் செல்வாக்கு உண்டு. மகாபாரதத்தின் எல்லாப் பகுதிகளும் நமோ நாராயணர் என்னும் வழிபாட்டு மந்திர உச்சாடனத்துடன் ஆரம்பிக்கும்.
- மகாபாரதம் கிருஷ்ணனுடைய அவதார மேன்மையை நிலை நாட்டுகின்றது.
- பாகவத மரபு, பாகவத பக்தியின் உன்னத நிலை, இறைவன் அருள், ஆன்ம விடுதலை என்பவற்றை ஆதாரமாக கொண்டது.
- பாகவத சிந்தனையை அடிப்படையாக கொண்டு, பகவத் கீதையின் செல்வாக்கு.
- வைணவச் சார்பு மட்டுமன்றி சிவவழிபாடு பற்றிய குறிப்புக்களும் உண்டு. அருச்சுனன் தவமிருந்து சிவ அருள் பெற்றமை. கிருஷ்ணன் சிவனிடம் வரம் பெற்றமை.
- மகாபாரதத்தில் திரிமூர்த்திக் கோட்பாடு சிறப்பிடம் பெறும்.
- அம்மன் வழிபாடு, துர்க்கா தோத்திரம், முருகவழிபாடு முதலிய விடயங்களும் உண்டு.
- ஆறுவகை சமய பிரிவுகளுடன் தொடர்புபடுத்தி எழுதப்படல் வேண்டும்.

(5 புள்ளிகள்)

**ஈ) தர்ம சிந்தனைகள்**

வேத புராண தர்ம சிந்தனைகளை மகாபாரதத்தில் பார்க்க முடியும் தர்ம சாத்திர தர்ம சிந்தனைகளையும் மகாபாரமூடாக நோக்கலாம். தர்மக் கருத்துக்கள் எக்காலத்துக்கும் பொதுவானவையாக குறிப்பிடப்பட்டுள்ளன. உலகியல் யதார்த்த நிலைகள் என்பவற்றோடு தொடர்புபடுத்தி தர்ம சிந்தனைகள் புலப்படுத்தப்படுகிறது. தர்மமே எல்லாவற்றிலும் மேலானது என்னும் சிந்தனை தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. விதுரன், வீஷ்மர், உருஷ்டிரன், கர்ணன் ஆகிய பாத்திரங்கள் மரபு வழியான தர்ம சிந்தனையின் காவலர்களாக விளங்குகின்றனர். கதைகள் மூலமாகவும், உபதேசமாகவும் தர்ம சிந்தனைகள் பரப்பப்பட்டுள்ளன.

(5+5+5+5=20 புள்ளிகள்)

03) **அ) தென்னக இந்துக் கல்விப் பாரம்பரியம்**

- தமிழ்நாட்டில் மிக ஆரம்ப காலத்தில் புலவர்களே கல்வியோடு தொடர்புடையவர்களாகக் காணப்பட்டனர். ஆயினும் கல்வி நிறுவனங்கள் பற்றிய குறிப்புகள் இல்லை.
- சங்க இலக்கியங்களில் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

  (உ+ம்) உற்றுளி உதவியும்
  உறுபொருள் கொடுத்தும்...” (புறநனூறு)
- சங்க மருவிய காலத்தில் தோன்றிய அறநூல்களில் கல்வியின் சிறப்பு பெரிதும் விளக்கப்பட்டுள்ளன.

  (உ+ம்) திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவையில் கல்வி பற்றிய குறிப்புக்கள் உண்டு.
- தமிழகத்தில் எழுச்சி பெற்ற சமண, பௌத்தப் பள்ளிகள், மடங்கள் கல்விப் போதனைகளைச் சாதாரண மக்களுக்கு வழங்கின. “பள்ளிக்கூடம்” என்ற சொல் வழக்கு கல்விச்சாலையை குறித்து வழங்குவதற்கு இது காரணமாயிற்று.
- பல்லவ – பாண்டியர் காலத்தில் கல்விக்கூடம் “கடிகை” என்ற பெயரால் சுட்டப்பட்டது.
- பல்லவரின் ஆட்சிக்காலத்தில் காஞ்சிக்கடிகைத் தானங்கள் வைதிகக் கல்வியைத் தமிழகத்தில் போதித்தன. பாகூர், சோமிங்கூர் ஆகிய இடங்களிலும் இக் கல்லூரிகள் காணப்பட்டன.

  கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர...” என்ற அப்பர் தேவார அகள் ‘காஞ்சிநகர்’ கல்வியிற் சிறந்திருந்தமையை எடுத்துக்காட்டப்படுகின்றது.
- சோழராட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் கோயில்கள் இந்துக்கல்வி மரபைப் பேணலாயின. திருக்கோயில்களை ஆதாரமாகக் கொண்டு கல்விச்சாலைகள் எழுந்தன.

  (உ+ம்) தஞ்சைப் பெரிய கோயிலில் சரஸ்வதி மண்டபம், வக்காணிப்பு மண்டபங்கள், வியாகரண மண்டபங்கள், தேவாரச் சுற்றுக் கல்லூரிகள், நிருத்த மண்டபங்கள் காணப்பட்டமை.
- இவற்றோடு பிராமணக் குடியிருப்புக்களான சதுர்வேதி மங்களங்களும் வேதக் கல்வியோடு கலை வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்தன.

  (உ+ம்)

  1) மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் (கி.பி. 1178 – 1218) திருவொற்றியூர் திருத்தலத்தில் அமைக்கப்பட்டிருந்த வியாகரண மண்டபம் அதற்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் பற்றி திருவொற்றியூர் கல்வெட்டு கூறுகிறது.
  2) முதலாம் இராஜேந்திரசோழன் காலத்துச் சாசனமொன்று வக்காணிப்பு மண்டபம் பிராமணரின் வேதக்கல்வி நிலையமென உறுதி செய்கிறது.
- நாயக்கர் காலத்தில் இந்துக் கல்வி மரபினைப் பேணிப் பாதுகாத்த சிறப்புக்குரியவை மடங்களும் ஆதீனங்களுமாகும். குறிப்பாகத் தென்னிந்தியாவில் வைதிகக்கல்வி மரபை வளர்த்து செல்வதில் முன்னிற்கின்றன.

  (உ+ம்) திருவாவடுதுறை ஆதீனம்
- ஐரோப்பியராட்சிக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களே இந்துக் கல்விப் பாரம்பரியத்தைப் பேணியவைகளாக விளங்குகின்றன.
- 19 ஆம் நூற்றாண்டில் இந்து மக்களிடையே ஏற்பட்ட சமய விழிப்புணர்வு காரணமாக பல சமய நிறுவனங்கள் தோன்றிக் கல்விச்சாலைகளை அமைத்துக் கல்விப் பணிபுரிந்தன.

  (உ+ம்) பிரமசமாஜம், ஆரியசமாஜம், இராமகிருஷ்ண மிசன் ஆகியன.

**ஆ) புராதன இந்துக் கல்வியின் நோக்கம்.**

- புராதன இந்துக்கல்விப் பாரம்பரியம் இரு வகை நோக்குடையதாகக் காணப்பட்டது.
  1. ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த அறிவைப் பெறுதல்.
  2. உலகியல் சார்ந்த அறிவைப் பெறுதல்.
- இவற்றை முறையே பரவித்தியா, அபரவித்தியா என அழைத்தனர்.
- பரவித்யா அதாவது ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த கல்வி வேத உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டது. இது இரசனை சார்ந்த கல்வியாக அதாவது இலக்கியங்களைக் கற்று, இரசித்து, இன்பம் பெறுவதோடு உயரிய இலட்சியத்தை அடையவும் வழிகாட்டியது.

agaram.lk

- அபரவித்யா உலகியல்சார்ந்த தொழில்சார் கல்வியாகக் காணப்பட்டது. ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன பிராமணருக்குரிய செயற்பாடுகளாகக் காணப்பட்டன. ஆயினும் அவை ஆன்மீக நோக்கம் கொண்டவை. ஆதலால் அதன் வழி நோக்கப்பட்டன. சாதாரண மக்களுக்குரிய தொழிற்கல்வி தந்தைவழி மரபில் போதிக்கப்பட்டது.
- மேலும் இந்துக்கல்வியின் நோக்கத்தை பின்வருமாறும் நோக்கலாம்.
  1) தனியாள் நோக்கம் - இது ஆன்மீக இலட்சியமாகவும் தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் அறநெறியைக் கடைப்பிடித்தல் எனப்பட்டது.
  2) சமூக நோக்கம் - இந்து சமூக தர்மத்தைப் பேணுவதற்கும் நாட்டில் அமைதி, சமாதானம், ஒற்றுமையைப் பேணவும் வழிவகுத்தது.
  3) அரச நோக்கம் - ஒரு நாட்டின் அரசனும் அரச அதிகாரிகளும் அரச தர்மத்தைக் கடைப்பிடிக்கவும், சமய நீதியைப் பேணவும் வழிவகுத்தது.
  4) பொருளாதார நோக்கம் - இவை வணிகர்கள் உழைப்பாளிகள் சமூகத்தினதும் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியது.
  5) தொழில்சார் நோக்கம் - தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவின.

(5 புள்ளிகள்)

**இ) புராதன இந்துக் கல்விக் கோட்பாடுகள்.**

- புராதன இந்துக் கல்வி மரபு குருகுலவாசக் கல்வியையே சிறப்பாகக் கருதியது.
- பிரமச்சரிய நிலையிலுள்ள மாணாக்கர் குருகுலுவாசம் செய்து கல்வி கற்க வேண்டுமெனவும், பிரமச்சரிய காலமே கல்விக்குரிய காலமாகவும் கருதப்பட்டது.
- குருசீட பரம்பரையில் பெரும்பாலும் செவி வழி மரபிலே கல்வி போதிக்கப்பட்டது. மனனமே கல்வியின் அடிப்படையானது.
- நூற்கல்வியின் இறுதி இலட்சியம் ஆன்மீக ஈடேற்றத்தை அடைவதே ஆகும்.

  (உ+ம்) 1) அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே
  2) கற்றதனாலாய பயன் கடவுளை வணங்குதல்
- ஆரம்பக் கட்டங்களில் கல்வியைப் பெறும் உரிமை அல்லது சந்தர்ப்பம் தகுதியுள்ள ஒரு சிலருக்கே உண்டு எனக் கருதப்பட்டது. நால்வகை வருணத்தாருள் சூத்திரர் தவிர்ந்த ஏனையோர் கல்வி கற்கும் உரித்துடையோராயினர்.
- ஏனையோர் தத்தம் குலத்தொழிலைத் தந்தை, தமையன், உறவினர் என்போரிடமிருந்து கற்றுக்கொண்டனர்.
- தர்மசாத்திரங்கள்குருகுல வாசத்துக்குரிய வயதெல்லையை மூன்று வருணத்தோருக்கும் வேறுபடுத்துகின்றன.
- ஒரு சிறு தொகையினரான மாணாக்கரே ஓராசிரியரிடம் கற்றல் வேண்டும் என்பது ஸ்மிருதி நூல்களின் இலட்சியமாகும்.
- ஆன்ம வித்தையைக் கற்பிப்பவர் ஆசிரியன், ஆச்சார்யன் எனப்பட்டார். சம்பளம் பெற்றுக் கொண்டு உலகியலறிவைத் தருகின்ற கருவி நூல்களைப் போதிப்பவன் உபாத்தியான் என வழங்கப்பட்டார்.
- குருகுலக்கல்வியின் இலட்சியமாக ஒழுக்கம் கருதப்பட்டது. குரு சீடனைத் தன் பிள்ளையாகக் கருதி கல்வி மூலம் நல்வழிப்படுத்த வேண்டும். குருகுலுக்கல்விப் பயிற்சி முடித்த பின்னரே தன் குருவுக்குப் பொருத்தமான குரு தட்சணை வழங்குதல் கடனாகக் கருதப்பட்டது.
- குருகுலக் கல்வியை முடித்து குருதட்சணை வழங்கிய மாணவன் 'ஸ்நாகதன்' எனப்பட்டனர்.
- குருகுலக் கல்வி முடிவில் கல்வியின் இலட்சியங்கள், அறிவுரைகளாகக் குருவினால் சீடனுக்குக் கூறப்பட்டன.

  (உ+ம்) உண்மை பேசு…", "தருமன் செய்…. "இத்தகைய அறிவுரைகள் தைத்திரிய உபநிடத சீஷாவல்லிப் பகுதியில் காணப்படுகிறது.

agaram.lk

- இடைக்காலங்களில் ஆசிரியருக்குரிய வேதனம் ஊர்ப் பொது நிலங்களில் பெற்ற வருவாயிலிருந்து வழங்கப்பட்டது.
- கல்வி கற்பிக்கும் குருவுக்கும் கல்வி கற்போனுக்கும் சமூகத்தில் பெருமதிப்பு அளிக்கப்பட்டது.

(5 புள்ளிகள்)

**ஈ) அரண்மனைக் கல்வி மரபுகள்**

- இதிகாசங்களில் சத்திரியச் சிறுவர்களுக்கு வேதக் கல்வியோடு அரண்மனைக் கல்வியும் போதிக்கப்பட்ட செய்திகள் காணப்படுகின்றன.
- அரசியல் முறைமை, அரச நிருவாகம், நீதி பரிபாலனம், சமூகப் பாதுகாப்பு முதலியவற்றின் பொருட்டு தரும சாத்திரங்கள், அர்த்த சாத்திரம் என்பனவும் போதிக்கப்பட்டன.
- வில்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம், மல்யுத்தம், தேரோட்டம், வாள்பயிற்சி முதலிய போர்க்கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன.
- இவற்றுடன் இலக்கிய இலக்கணங்கள், வானியல் சோதிடக் கலைகள், கணிதம், தருக்கம் என்பனவும் சிற்பம், ஓவியம், நாட்டியம், இசை முதலிய கலைகளும் கற்பிக்கப்பட்டமை பற்றி அறிய முடிகிறது.

(5 புள்ளிகள்)

(5+5+5+5=20 புள்ளிகள்)

04) ➢ சங்கரவேதாந்த விளக்கமும் பிரமாண நூல்கள் பற்றியும் குறிப்பிட்டு அறிமுகம் செய்தல்.

❖ **பிரம்மம்**

அவரது அத்வைத கோட்பாட்டில் பிரம்மம், ஆன்மா, உலகம் என்பவற்றில் உள்பொருள் ஒன்றே உண்மையானது என்பது குறிப்பிடற்பாலது. பிரம்மம் உண்மை ஏனைய இரண்டும் தோற்றமானது. ஒருமைக் கொள்கையே அத்வைதம் போதிக்கும் பிரம்மக் கோட்பாடு ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றே கேவல அத்வைதம் பிரம்ம பரிபூரண வாதம், ஒருமை வாதம், ஏகான்ம வாதம் போன்ற பல பெயர்கள் இதற்குரிய விளக்கங்களாக உள்ளன.

பிரமம் மட்டுமே உண்மை, அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது, எங்கும் செறிந்த நீக்கமற்ற நிறைந்திருப்பது. பிரம்ம எதனைப் போன்றதாகவும் இல்லையெனக் கூறலாமேயொழிய எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம். (நேதி).

பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன.
1. நிர்க்குண நிலை
2. சகுண நிலை – விளக்கம்.

ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரமம் பல சீவன்களாகின்றது. ஆன்மாவே பிரம்ம, தத்துவமஸி, அகம் பிரமாஸ்மி, சோகம் அஸ்மி எனும் உபநிடத மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படையாகின்றன.

சங்கரர் அத்வைத தத்துவத்தை அரைச் சுலோகம் ஒன்றில் தெளிவுபட விளக்கி பிரம்மமே சத்தியென கூறுகின்றார். "பிரம்மம் சத்தியம், ஜகத்மித்யா, ஜீவோ பிரம்ம ஏவ ந அபர" பிரம்மம் உண்மையான பொருள், இந்த உலகம் ஒரு தோற்றம், ஒவ்வோர் ஆன்மாவும் பிரம்மம் தான் வேறொன்றுமில்லை என்பது இதன் பொருள்.

❖ **ஆன்மா**

- சங்கரர் ஆன்மாவின் இரு நிலைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.
- பரமாத்மா (என்றும் உள்ள பொருள்)
- ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)
- ஜீவாத்மாக்கள் பலவாகத் தோன்றும் அடிப்படையில் ஜீவாத்மாகவும் பரமாத்மாகவும் ஒன்றென்பதைப் பின்வரும் வாதங்கள் மூலம் நிறுவுகின்றார்.
  1. அவச்சேத வாதம்
  2. பிரதி பிம்ப வாதம்
- அவித்தை என்பதன் பொருள் அறியாமையாகும். அவித்தையே பிரமத்தைச் சீவன்னாக்குவது.
- அவித்தையாகிய அஞ்ஞானத்திலேயே சீவன் தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.

agaram.lk

❖ **உலகம் பற்றிய கொள்கைகள்**

சங்கரின் அத்வைதக் கொள்கையின் படி உலகம் என்பது உண்மையல்ல, அது தோற்றம் என்பதாகும். உலகத்தின் உண்மையற்ற நிலை என கூறுவதற்குரிய தேவையும் காரணங்களும் பற்றிய விளக்கம். உலகம் நிலையற்றது, பொய்யானது. விவர்த்தவாதக் கோட்பாடு – கயிறு பாம்பாக மாறித் தெரியும் காட்சி. மாயைக் கோட்பாட்டின் மூலம் பிரம்மமே உலகைத் தோற்றுவிக்கின்றது என்கிறார். மாயை என்பதற்கு பலவிதமான பொருள் கொள்வர். மாயையைச் சொல்லால் விளக்க முடியாது, அது அநிர்வசனீயம் எனப்படும்.

❖ **ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகள்.**

சங்கரர் ஞானத்திற்கு முதன்மை அளிக்கின்றார், ஆன்மா அவித்தையாகிய அறியாமையிலிருந்து விடுபட்டு தன்னை பிரம்மென உணர்தலே விடுதலையாகும். தம்மை பிரம்மமாக உணர்வதற்குரிய வழிமுறைகளாக பிரம்ம ஞானத்தைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகியன முக்கியமானவை. ஞானத்தைப் பெறுவதற்கு வழிபாடு, நல்லொழுக்கம், நியமநிட்டை என்பனவும் அவசியம். தம்மை பிரம்மமென உணர்தலே அத்வைத அனுபவம். அவர் கூறும் முத்தி அத்வைத முத்தி, சங்கரர் சீவன், விதேக முத்திப ற்றியும் குறிப்பிடுகின்றார். பாவும் பிரம்மத்தின் அம்சங்களே என்பதை உணர்கின்ற நிலையில் வேற்றுமைகள் நீங்கும்.

*(20 புள்ளிகள்)*

*05)*

- சைவத்தின் முடிந்த முடிபைக் கூறுவது. வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் புராணங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் போன்றவற்றை பிரமான நூல்களாகக் கொண்டு பிரத்தியட்சம் அனுமானம், ஆப்த வாக்கியம் என்ற அளவைப் பிரமாணத்தின் அடிப்படையில் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் உண்மைகளையும் இயல்புகளையும் விளக்குகின்றது.
- பதியின் உண்மைத் தன்மையினை பின்வரும் அடிப்படையில் நிருபிக்கின்றது.
  1) உலகத்தின் உண்மைத் தோற்றத்தினைக் கொண்டு.
  2) படைப்பின் நோக்கத்தினைக் கொண்டு.
  3) குறைபாடு உடைய பொருள்களைக் கொண்டு
- பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உளான். எனில் உலகம் உண்டு எனில் அதனைப் படைத்த இறைவனும் உண்டு. குடையினை உதாரணமாக கொண்டு தொழிற்பாட்டின் மூலம் நிரூபித்தல்.
- ஆன்மா செய்த வினைகளின் பயன்கள் அவ்வான்மாக்களைச் சென்று சேராது. அவ்வாறு வினைகளுக்கேற்ப அவற்றைச் சேர்க்க ஒருவன் வேண்டும் அவனே இறைவன்.
- குறைபாடு உடைய பொருள்களை இனம் கண்டு கொள்வதற்கு ஒரு நிறைவான பொருள் வேண்டும். அவ்வாறு நிறைவன பொருளே இறைவன்.
- பதியின் இலக்கண இயல்புகளாக சத், சித், ஆனந்தம் என்பதன் விளக்கம் (சத் - எங்கும் உள்ளது, சித் - சுகப்பிரகாசம், ஆனந்தம் - எண்குணங்கள்)
- பதியின் இருவகை நிலைகள்.
  1) சொரூப நிலை (சிறப்பியல்பு) விளக்குதல்.
  2) தடத்தி நிலை (பொதுவியல்பு) விளக்குதல்.
- தடத்த நிலையில் மூவகைத் திருமேனிகள் (அருவம், உருவம், அருவுருவம்) விளக்குதல்.
- நவபேதங்களின் ஊடாக ஐந்தொழில்.
  (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) விளக்குதல்.
- ஒன்றாய், உடனாய், வேறாய் என்ற நிலை ஐந்தொழில்களை ஆற்றுகின்றார்.
- பதியின் வியாபகத் தன்மையை திருவருட்பயன் பாடல்கள் மூலம் விளக்குதல்.

*(20 புள்ளிகள்)*

*06)* **அ) ஆரியச்சமாஜத்தின் பணிகள்**

- நவயுக இந்தியாவில் இந்து சமய – சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஆரிய சமாஜத்திற்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.
- பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இந்தியாவில் இந்து சமய – சமூகங்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது.
- சுவாமி தயானந்த சரஸ்வதி வேத நெறியையும், சமஸ்கிருத மொழியையும் முதன்மைப் படுத்தி 1875 ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரிய சமாஜத்தை பம்பாயில் நிறுவினார்.

- இந்து சமுதாயத்தினர் எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியிருந்த சவால்கள் பலவற்றிற்கு ஆரியசமாஜத்தின் வாயிலாக விடைகொடுத்தார்.
- இத்தகைய ஆரியசமாஜம் இந்து சமுதாயத்தினருக்குப் பல்வேறு வழிகளிலும் பல பணிகளைச் செய்து இந்துமத எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது.
- மூட நம்பிக்கைகளை இந்து சமுதாயத்தில் இருந்து விரட்டுதல், புரோகித முறை எதிர்ப்பு, விக்கிரக வழிபாடு எதிர்ப்பு, சாகிபேத எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை ஆதரவு முதலானவற்றிற்கு வேதங்களில் சான்று காட்டி நிரூபித்தல்.
- சாதி, மத, பால் வேற்றுமைகள் பாராமல் மக்கள் மொழிகளில் வேதங்களை மொழி பெயர்த்துப் பரவலான முறையில் பரப்பி மக்களை விழிப்படையச் செய்தமை.
- சுதேசிய கல்வி முறைக்கும், சமய – விஞ்ஞான பிணைப்பிற்கும் வேதம் வழிகாட்ட வல்லது. என்ற கொள்கை பரப்பப்பட்டது.
- நூல்களை வெளியிட்டமை அதாவது ரிக்வேத பாஷ்ய பூமிகா (1877), ரிக்வேத பாஷ்யம் (1899), யசுர்வேத பாஷ்யம் உட்பட 26 நூல்கள் வெளியிடப்பட்டது.
- இவரது நூல்களில் சத்தியார்த்தப் பிரகாசம் குறிப்பிடத்தக்கது.
- சமய பிரசாரம் செய்தமை. அதாவது கூட்டாக இணைந்து சுற்றுப்பயணங்கள் செய்து 1845 – 1860 வரைக்குமான காலங்களில் இந்தியா முழுவதும் சென்று சமயப்பிரசாரம் செய்தமை.
- மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட 'சுத்தி' என்னும் இயக்கத்தையும், இந்துக்களை ஒன்று திரட்ட 'சங்கடனம்' என்ற இயக்கத்தையும் தயானந்தர் தாபிப்பதற்கு ஆரியசமாஜமே அடிப்படை எனலாம்.
- ஆரிய சுத்திச் சடங்கு விதிகளை உருவாக்கியமை. அதாவது ஹோமம், தலைமுடி களைதல், பூணுல அணிவித்தல், காயத்ரி மந்திரம் கற்பித்தல் ஆரியசமாஜத்தின் பத்துக் கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளச் செய்தல் ஆகியவை அந்த விதிகளாகும்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூணூல் அணுவித்து அவர்களை மேன்மைகளாகப் பிரகடனப்படுத்தியமை. 1888 இல் பஞ்சாப்பில் முஸபர்கட் மாவட்டத்தில் பண்டித கங்காராம் எனும் ஆரியசமாஜப் பிரசாரகர் ஓட் தீண்டாதார் சமூகத்தினை பூணூல் அணுவித்து இந்து சமூகத்திற்குள் கொண்டு வந்தமை.
- தேசிய கல்வி முறையினை ஆரியசாஜம் நடைமுறைப்படுத்திச் சாதனை படைத்தது. அதாவது தாய் நாட்டின் இலக்கியம், வரைலாறு, விஞ்ஞானம், கலை, அரசியல், போர்முறை, உற்பத்தித்திறன், தொழில், வாணிபம் ஆகியவற்றை வளர்த்தெடுத்தல்.
- பால்ய விவாகத்தை எதிர்த்தமை பிரம்ம புராணத்தையும், மனதர்ம சாத்திரத்தையும் ஆதாரம் காட்டி பால்ய விவாகத்தைக் கண்டனம் செய்துள்ளமை.
- விதவை பெண்களின் மறுமணத்தினை ஆதரித்தமை. ரிக் வேதத்தினை ஆதாரம் காட்டி விளக்கப்பட்டுள்ளது.
- தயானந்தர் உருவாக்கிய ஆரிய சமாஜம் பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலான பிரதேசங்களில் செல்வாக்குடனும், பிற தேசங்களில் காலூன்றியும் வெகுஜன இயக்கமாக, கல்வி இயக்கமாக, தீண்டாமை எதிர்ப்பு இயக்கமாக,
- பெண்ணுரிமை இயக்கமாக, சமூக சீர்திருத்த இயக்கமாக, தேசிய இயக்கமாக வளர்ச்சி பெற்று விளங்கிற்கு.

**ஏற்படுத்திய சமூக மேம்பாடுகள்.**

- மூடக் கொள்கையில் இருந்து நீங்கி அறிவைப் பெற்றமை.
- அறிவியல் சிந்தனை வளர்ந்தமை.
- சமூக விழிப்பணர்வு ஏற்பட்டமை.
- கல்வியில் நாட்டம் ஏற்பட்டமை.
- மத மாற்றம் தடுக்கப்பட்டமை.
- வர்ண தர்மம் கடந்த வாழ்வியல் சிந்தனை.

(20 புள்ளிகள்)

07)

- தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக் காலம் பக்தி இயக்க காலம் சிறப்பிக்கப்படுகின்றது.
- கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டுக்கும் இடையிலான காலம்.
- சைவசமய மறுமலர்ச்சியில் கட்டடக்கலையின் வளர்ச்சி முக்கியமானதாகும்.
- திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியை நான்கு கட்டடங்களாக வகைப்படுத்தி நோக்கலாம்.
  1) மகேந்திர வர்மன் பாணி (குகைக்கோயில்)
  2) நரசிம்மன் பாணி (ஒற்றக்கல் கோயில்)
  3) இராஜ சிம்மன் பாணி (கற்றளிக் கோயில்)
  4) நந்தி வர்மன் பாணி (பிற்கால கற்றளிக் கோயில்கள்)

**மகேந்திர வர்மன் பாணி**

கி.பி. 610 – 640 வரையான காலம். மலைகளைக் குடைந்து அமைப்பது. இதனை குடை வரை, குடபோகம், குடை தளிகள் எனவும் அழைப்பர். மண்டகப்பட்டு மாமண்டூர், வல்லம், பல்லாவரம், சீய மங்கலம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் காணலாம். கருவறை,

முகமண்டபம், தாழ்வாராம் பிரதான அம்சமாக காணப்படுகின்றது. மண்டப தூணுகள் 7 அடி உயரமும் 2 அடி அகலமும் கொண்டது. தூண்களை சிங்கங்கள் தாங்குவது போலவும், மேல் பகுதியில் தாமரை இதழ் வடிவிலும் அமைக்கப்பட்டிருக்கும். கருவறையின் இரு மருங்கிலும் இரு துவார பாலகர்கள் காட்சி தருகின்றார்கள், சுவர்களில் மிருகங்கள், பறவைகள், புடைப்பு சிற்பமாக காணப்படுகின்றது. கருவறையில் பட்டை தீட்டாத லிங்கங்கள் காணப்படுகின்றன.

**நரசிமன் பாணி**

கி.பி 640 – 680 வரையான காலம். தனிப்பாறையை செதுக்கி அமைக்கப்படுவது. இனை மலைதளிகள், ரதக்கோயில்கள் என்றும் அழைப்பர். ஏகதள விமானம், தூஞ்கானை மாடவிமானம் காணப்படும். மாமல்லபுர மலைத் தளிகள் மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நகர, திராவிடக் கலைப்பாணியில் அமைந்த தர்மராஜரதம் மூன்று தளங்களைக் கொண்டது. இந்து சமயச் சார்புடைய பல சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை “சிற்பக் கலை களஞ்சியம்” என்று போற்றப்படுகின்றது.

**இராஜசிம்மன் பாணி :-**

கி.பி 690 – 800 வரையான காலம். சிறு சிறு கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் கட்டுவதாகும். ஆகம சிற்ப பிரமாணத்தின் படி மூலஸ்தானம், அர்த்த மண்டபம், பலிபீடம், திருச்சுற்று மாளிகை போன்ற முழு கட்டடக்கலை அம்சங்கள் கொண்டு அமைந்ததாகும். மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், பனைமலைக் கோயில், காஞ்சிபுர வைகுந்தப் பெருமாள் கோயில் பற்றிய குறிப்புக்களும் விளக்கங்களும்.

**நந்திவர்மன் பாணி :-**

கி.பி 800 – 900 வரையான காலமாகும். கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் கட்டுவதாகும். இங்கும் எல்லா வித கட்டட அம்சங்களும் காணப்படுகிறது. இவை அளவில் சிறியவை. காஞ்சி முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர், வாடமால்லீஸ்வரர் போன்றவை அரைவட்ட வடிவில் அமைந்துள்ளன. சகாதேவ ரதத்தை முன்மாதிரியாகக் கொண்டவை.

(20 புள்ளிகள்)

agaram.lk

08) **இந்து விக்கிரகக் கலையின் அறிமுக விளக்கம் கொடுத்து விளக்குதல் :-**

இந்து விக்கிரகக் கலையின் பெருமையை உலகறிய செய்வதற்கேற்ற சிறப்பு நடராச வடிவத்தில் விளங்குவதற்குப் பல காரணங்கள் இவ்வடிவத்தின் தோற்றம் சிற்ப சாஸ்திரங்கள் கூறுமளவு பிரமாணங்களின் படி அமைக்கப்படுவதால் கலையெழில் மிக்க நடனகோலத்துடன் விளங்குவது. காண்போர் உள்ளத்தைக் கவர வல்லது. உத்தம தசகால அளவுப் பிரமாணத்தில் உருவாக்கப்படுவது. சமய தத்துவச் சிறப்பு மிக்கது. ஊன்றிய திருவடி (வலது), தூக்கிய திருவடி (இடது), வீசுகரம் (இடது), அபயகரம் மற்றும் உடுக்கை,அக்கினி ஆகிய பொருட்கள் திருக்கரங்களில் விளங்கும்.

சடாமுடி – கங்கை, பிறை, அரவாபரணம், புலியாடை ஆகியவற்றுடன் கூடியது. நடராச வடிவம்.

**ஐந்தொழில் தத்துவம் :-**

படைத்தல் - உடுக்கை ஏந்திய கரம்
காத்தல் - அபயகரம்
அழித்தல் - அக்கினியுடன் கூடிய கரம்
அருளல் - தூக்கிய திருவடி

"தோற்றம் துடியதனில் தோயுத்திதி அமைப்பில் சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம் ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி நான்ற மலர்ப்பதத்தேடு நாடு" – உண்மை விளக்கம் நடராஜ வடிவம் பஞ்சாட்சரமாகிய நமசிவாய என்பதனையும் தத்தவப் பொருளாகக் கொண்டு விளங்குவது.

ந – திருவடி
ம – திருவயிறு
சி – திருத்தோள்
வா – திருமுகம்
ய – திருமுடி

மற்றும் உலக இயக்கத்தினையும் இவ்வடிவம் பிரதிபலிப்பது.
தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற நூல்களில் நடராசர் போற்றப்படுகின்றார்.
தற்காலத்தில் பௌதீக ஞான விவாதங்களில் உலகின் தோற்றத்தின் மிக ஆதியான வடிவமாக இதைக் கொள்வார்கள்.

- முயலகன் – ஆன்மா
  பாம்பு – ஆணவம்
  முக்கண் - இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி
  சிலம்பு – பலவினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதைக் குறிக்கின்றது.
  திருவாசி – ஓங்காரத்தைக் குறிக்கின்றது.
  சடா முடி – ஞானம்
- நடராஜர் விக்கிரகம் சமய காலத்துவ, தத்துவம் தொடர்பான ஆய்வாளர் கருத்துக்கள்.

(20 புள்ளிகள்)

agaram.lk